[2011 ஆகஸ்ட் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) உறுப்பினர் அவர்கள், ஒரு நிமிடம் நான் சொல்வதைக் கேளுங்கள். Body language மூலம் அவையினுடைய கண்ணியத்தைக் குலைக்கின்ற அளவிற்கு, எந்த அளவுக்கு நீங்கள் செயல்பட்டீர்கள் என்பதை அவைக்கு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் சொன்ன பிறகு, ஓர் உறுப்பினர், நீங்கள் அதைத்தான் வழக்கமாகச் செய்வீர்கள் என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? இதற்கு நீங்கள்தான் காரணம். You are the cause of action. (Interruptions) You are the cause of action. (Interruptions) You are the cause of action. நீங்கள் அந்தமாதிரி (body language) செய்யவில்லையென்றால், அமைச்சர் அவர்கள் அதுபோல கருத்து சொல்லியிருக்க வேண்டிய அவசியம் எழுந்திருக்காது. உறுப்பினர் அவர்களும் தொடர்ந்து சுட்டிக்காட்ட வேண்டிய அவசியமும் எழுந்திருக்காது. (குறுக்கீடுகள்) You are the cause of action, because you only created it. (குறுக்கீடுகள்)

(தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

37—

சொந்தக் கட்டடம்

***1552—திரு. க. தினகரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூலூர் வட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டத்தில் புதியதாக வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்காக நிலம் தேர்வு

2011 ஆகஸ்ட் 16]

செய்யப்பட்டுள்ளது. இதில், மேற்படி அலுவலகம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய பரிசீலனைக்குட்பட்டு முடிவெடுக்கப்படும்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ரசிகனாக இருந்து கோவை மாவட்டம், கிணத்துக்கடவு ஒன்றியம், பணப்பட்டி கிராமத்திலே வளர்ந்த என்னை இந்த மாபெரும் சபைக்கு அழைத்து வந்திருக்கும் நான் வணங்குகின்ற மனித தெய்வம் திருமிகு டாக்டர் கேப்டன் புரட்சிக் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வெற்றியை அவர்களுக்குச் சமர்ப்பித்து, எனது வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்ய வந்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், என்னை வெற்றிபெறச் செய்த சூலூர் வாக்காளப் பெருமக்களுக்கும், எனது தாய் தந்தைக்கும் நன்றியைக் கூறிக்கொண்டு, சூலூர் வட்டத்தில், வட்டாட்சியர் அலுவலகம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்? V.A.O., R.I. அலுவலகங்களை ஒருங்கிணைந்த அலுவலகங்களாகக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் வட்டாட்சியர் அலுவலகம் தற்பொழுது வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றது. அதற்குண்டான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. வருகின்ற நிதியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளையர் காலத்தில் கட்டப்பட்ட அரூர் வட்டாட்சியர் அலுவலகம் ஏறக்குறைய 70, 80 ஆண்டுக்காலம் பழைமை வாய்ந்தது. ஒரே கட்டடத்தில், ஒரு பக்கத்திலே சார்நிலைக் கருவூல*

அலுவலகமும், மறு பக்கத்திலே சார்–பதிவாளர் அலுவலகமும், நடுவிலே வட்டாட்சியர் அலுவலகமும் இயங்கி வருகின்றன. அந்த வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதேநேரத்தில், தமிழகம் முழுவதும் கட்டக்கூடிய வட்டாட்சியர் அலுவலகங்களில் பொதுமக்கள், மனு கொடுக்கக்கூடிய மக்கள் ஆகியோர் பயன்படுத்துவதற்கு கழிவறை வசதி, குடிதண்ணீர் வசதி, இப்பேர்ப்பட்ட அம்சங்களோடு கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரூர் வட்டாட்சியர் அலுவலகம் பழைமை வாய்ந்ததாக இருக்கின்றது; புதியதாகக் கட்டிக் கொடுக்கப்படுமா என்பதோடு, கழிவறையோடு கட்டித் தரப்படுமா என்றும் கேட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே 12 வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே ஒரு தெளிவான பதிலுரையை அளித்திருக்கின்றார்கள். படிப்படியாக அனைத்துக் கட்டடங்களும் கட்டித் தரப்படும், அதேபோல பராமரிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள்.

திரு. பு. வெற்றிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகி வரும் மக்கள் தொகையால் மக்கள் பயன்பாட்டிற்காக 5 தாலுகா அலுவலகங்கள் சென்னை நகரிலே இயங்கி வருகின்றன. மக்கள் தொகை பெருகி வருவதால், இந்த 5 தாலுகா அலுவலகங்கள் போதாது. அதனால், இராயபுரம் பகுதியிலோ அல்லது ஆர்.கே. நகர் பகுதியிலோ ஒரு வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தந்தால் மக்களுக்கு உதவியாக இருக்கும். அதுமட்டுமல்லாமல், அம்மா அவர்கள் நல்ல எண்ணத்தோடு, இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்பதற்காக முதியோர் உதவித் தொகை, ஆதரவற்றோர் உதவித் தொகை, விதவைகள்

2011 ஆகஸ்ட் 16]

உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை ஆகிய அனைத்தையும் உயர்த்திக் கொடுத்துள்ளார்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. குடும்ப ஆட்சியில், உதவித் தொகை 500 ரூபாய் என்றிருந்தபோதே அந்த உதவித் தொகையைப் பெற்றுத் தருவதற்கு இடைத்தரகர்கள் 1,000 ரூபாய், 2,000 ரூபாய் என்று வாங்கினார்கள். இப்பொழுது இடைத்தரகர்கள் பெருகிவிட்டார்கள். தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் காவல் துறைமூலம் அதைத் தடுக்க வேண்டும். ஏழைகளைப் பாதிக்கின்ற வண்ணம் அந்த இடைத்தரகர்கள், அதே தி.மு.க. இடைத்தரகர்கள் சென்னையிலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் பெருகி வருகிறார்கள் என்பதைக்கூறி, இதைத் தடுக்க முடியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்பது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது, புதிய தாலுகா அலுவலகம் ஆரம்பிக்க முடியுமா என்று கேட்டிருக்கின்றார். அதற்குத் தனிக் கேள்வி போடவும். அதேநேரத்தில், தாலுகா அலுவலகங்களில் முதியோர் உதவித் தொகை வாங்கித் தருவதற்கு தரகர்கள் அதிகமாகிவிட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு, இந்த மன்றத்திலே நான் பதில் சொல்லியிருக்கின்றேன். கடந்த கால ஆட்சியில் இதுபோன்ற தவறுகள் நடைபெற்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், அந்தத் தரகர்கள் எல்லாம் தாலுகா அலுவலகங்களிருந்து விரட்டி அடிக்கப்பட்டு, சில இடங்களில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, இதுபோல் குறிப்பிட்டு எங்காவது இருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.